# தமிழர் மெய்யியலில் சார்வாகம்

முனைவர் மா மாணிக்கம்

கௌரவ விரிவுரையாளர், இந்தியப் பண்பாட்டுத் துறை,

அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும்

பண்பாட்டுக் கல்லூரி, பழனி -624601

manickam.8882@gmail.com

69

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழரின் சிந்தனை மரபானது மிகவும் தொன்மையானதாகும். சமயத் தன்மை கொண்ட நம்பிக்கைகள் வேத மரபிலிருந்து உதித்தவையாகக் கருதத் தக்கனவாக அமைகின்றன. வேதத்தை எதிர்த்த சமயங்கள் அவைதீக சமயங்கள் என்று அழைக்கப்பட்டன. அதில் உலகியல் சார்ந்த உண்மைகளை மட்டுமே உறுதியாகப் பின்பற்றும் சமயங்கள் , பௌத்தம், சமணம், சாங்கியம் என்பனவாகும். இவற்றில் உலகம் மட்டுமே உண்மை என்று கூறும் லோகாயதம் , சார்வாகம் ஆகியனவும் அடங்குகின்றன. சார்வாகர்கள் வட மரபில் வேதத்தினைப் பொய்யென பரப்புரை செய்தவர்கள் ஆவர். பூதவாதிகள் எனவும் ஜடக் கொள்கையினர் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்களுடைய தத்துவ மரபினை பூதவாதம் என்ற அடிப்படையில் தமிழ் இலக்கியங்களில் காணமுடிகிறது. தமிழர்தம் சமய மரபில் பூதவாதம் குறித்தச் சிந்தனைகள் காணப்படுகின்றன. உலகத் தோற்றம் , உயிர்களின் தோற்றம் , பரிமாண வளர்ச்சி ஆகியனவற்றை புறநானூறு , தொல்காப்பியம் முதலிய நூல்கள் எடுத்துரைக்கின்றன. மணிமேகலை பூதவாதத்தின் தன்மைகளை கூறுகிறது. உலகம் மட்டுமே உண்மை , இம்மை, மறுமை என்பன பொய்யே என்று கூறுகின்றன. இவ்வாறு தமிழர் சிந்தனை மரபில் ஜடக் கொள்கை அல்லது சார்வாகம் என்னும் தத்துவ மரபு சிறந்து விளங்கியதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**குறிப்புச் சொற்கள் :** சார்வாகம், ஜடக்கொள்கை, பூதவாதிகள், பிரகஸ்பதி, ஐம்பூதச் சேர்க்கை , பரிணாம வளர்ச்சி

**முன்னுரை**

தமிழர்களின் அறிவுருவாக்கச் செயல்பாடுகளில் ஒன்றாக தத்துவங்கள் அமைகின்றன. தமிழர்தம் வாழ்வானது பொருளாயத வாழ்வாகவே பெரிதும் காணப்பட்டமையை சங்க இலக்கியத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. ஆன்மா , வீடுபேறு போன்றவை பற்றிய கருத்தாக்கங்கள் உருப்பெறாத சூழ்நிலையினை சங்க இலக்கியத்தின் எட்டுத் தொகை நூல்களில் கலித்தொகை , பரிபாடல் தவிர்த்த பாடல்களில் காணமுடிகிறது. பக்தி என்பது மனித வாழ்வின் ஒரு கூறாக மட்டுமே இருந்தது. இயற்கை வழிபாடுகளையே பெரிதும் கொண்டிருந்தார்கள். தமிழர் வாழ்வில் பொருள்முதல்வாத சிந்தனைகள் மேலோங்கி இருந்தன. உலகாயதம் , சார்வாகம், பௌத்தம், ஆசீவகம், சமணம் போன்ற அவைதீகத் தத்துவங்கள் தமிழர் அறிவு மரபில் காணப்படுகின்றன. சமணம் , பௌத்தம் ஆகியவை சமயங்களாகவும் கருதப்பட்டன. அதில் ஆன்மாவை ஏற்றுக் கொண்ட சமயமாக சமணமும் , அனான்மா குறித்து சிந்தித்த சமயம் பௌத்தமாகவும் காணப்படுகிறது. சார்வாகம் என்பது உலகாயதத் தத்துவம் என்றே கூறப்படுகிறது. உலகியல் சார்ந்த அடிப்படைச் சிந்தனைகளை கொண்டதாக சார்வாகம் காணப்படுகிறது. சார்வாகர்கள் வேதங்களை பொய்யென்றும் அவற்றால் மனிதர்க்கு எந்தவித நன்மையும் இல்லை என்றும் கூறுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். தமிழர் சமய மரபில் இத்தத்துவச் சிந்தனை காணப்படுவதை மணிமேகலை, குண்டலகேசி, நீலகேசி ஆகிய நூல்களில் காணமுடிகிறது. மணிமேகலையில் தத்துவ உரையாடலில் ஈடுபடும் போது உலகாயதர் , சார்வாகர் ஆகியோர் மணிமேகலையுடன் விவாதிக்கின்றனர் என்பதைக் காணமுடிகிறது. இக்கட்டுரை தமிழ் மரபில் சார்வாகம் குறித்து அமைகிறது.

**சார்வாகம்**

பொருளாதயவாதிகள் அல்லது ஜடக் கொள்கையினர் எனவும் லோகாயதர் , சார்வாகர் எனவும் அழைக்கப்பட்ட பிரிவினர் பழங்காலத்தில் வேத எதிர்ப்புக் கொள்கையினை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்தனர். வேதத்தை ஆதரித்தவர்களால் இகழ்ச்சிக்குள்ளாக்கப்பட்டவர்களாக இவர்கள் கருதப்படுகின்றனர். சார்வாகம் என்னும் தத்துவத்தை தோற்றுவித்தவர் பிரகஸ்பதி என்று கூறப்படுகிறார். சார்வாகம் என்பது இனிய வாக்கு என்னும் பொருள் கொண்டது. பிரகஸ்பதி எழுதியதாகக் கூறப்படும் நூல் கிடைத்தில எனினும் சார்வாகரை எதிர்த்தவர்கள் கூறிய கூற்றுக்களிலிருந்து சார்வாகர் பற்றிய நூல் இருந்திருக்க வேண்டும் என யூகிக்கப்படுகிறது. இது ஒரு தத்துவமாக வளர்ச்சி பெற்று இந்திய மக்களிடம் நிலைபெற்றது. எனினும் தத்துவமாக வளர்ச்சி பெறும் அளவிற்கு அதன் தன்மை இருந்ததா என ஐயுறுகின்றனர். சார்வாகத்தை பிற தத்துவநூல்கள் எதிர்த்ததைக் கொண்டே அறிந்து கொள்ளத்தக்கதாக உள்ளது. “பிற தர்சன நூல்களில் அதனை மறுப்பதற்காகத் தரப்படும் தொகுப்புரை மட்டுமே அக்கொள்கையைப் பற்றிய விளக்கமாக உளது. அதனை எதிர்த்தோரின் கூற்றுகளைக் கொண்டே அதன் மதிப்பினை அளவிட வேண்டியதாயிருக்கிறது ” (எம்.ஹரியண்ணா, 2019) என்று ஹரியண்ணா கூறும் கூற்றில் பண்டைக் காலத்தில் மேலாதிக்கம் செலுத்திய வேத மதங்கள் பிற சமயத்தவரை அழித்துள்ளனர் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. சார்வாகத்தை எதிர்த்த வேத நூல்களிலிருந்தே சார்வாகம் பற்றிய தத்துவத்தை அறிந்து கொள்ள இயலுகிறது. இத்தத்துவத்தின் அடிப்படையே காட்சியளவையாகும். கண்ணால் கண்டு அதனை உணர்ந்து கொள்ள இயலுமென்றால் அதுவே உண்மை பிறவெல்லாம் பொய் எனக் கூறுவதாக அமைவதாகும். “சார்வாகக் கொள்கைகளுள் மிகவும் முக்கியமானது காட்சியை மட்டுமே அடிப்படையாகக் கொள்வதாகும். வழியளவை உள்ளிட்ட பிற அளவைகள் அனைத்துமே விலக்கப்படுவதால் பொதுவான இந்தியக் கருத்தின்படி வாழ்க்கைக்குக் கட்டுப்பாடான பயிற்சியாக இருக்க வேண்டிய தத்தவம் உள்ளத்தைக் கட்டுப்படுத்தும் பயிற்சியாகக் கூட இல்லை ” (மேலது) என்ற கூற்றானது சார்வாகத் தத்துவத்தின் மீது கொண்ட காழ்ப்பின் விளைவாக வெளிப்படுவதாகும். இந்தியத் தத்துவங்களை வேதங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கும் இந்தியத் தத்துவவாதிகள் அவைதீக சமயங்களைப் பற்றிய மோசமான முன்னுதாரணங்களை முன் வைக்கின்றனர். மனிதர்கள் தம் வாழ்வை உலகியல் சார்ந்தே அமைத்துக் கொள்கின்றனர். அப்பாலையில் இருந்து கடவுள் காத்துக் கொண்டிருக்கிறார் என்னும் பொய்யை அம்பலப்படுத்தியவர்களே சார்வாகர்கள். ஆரியர்களின் வேத மந்திரங்களுக்க எந்தவித ஆற்றலும் இல்லை என்று கூறினர். “சாருவாகம் பூதவாதம் என்று அழைக்கப்படும். ஐம்பூதங்களின் சேர்க்கையே இவ்வுலகின் பலவகைப்பட்ட பொருட்கள் என்று அது கூறும். ஆனால் உலகப் பொருட்களை அதன் முந்திய வடிவமான ஐம்பூதங்களாகக் குறைப்பது அதன் நோக்கமல்ல. உயிர் என்றால் என்ன என்ற கேள்விக்குச் சாருவாகம் வழங்கும் பதில் கவனிக்கத்தக்கது. குறிப்பிட்ட ஒரு சரியான விகிதாச்சாரத்தில் ஐம்பூதங்கள் ஒன்று சேர்ந்து புதுவகைப் பண்பை உற்பத்தி செய்கின்றன. அதுவே உயிர் என்று சாருவாகம் கூறும். அதாவது சரியான விகிதாச்சாரம் என்ற அளவுரீதியாக நிகழ்வு நடைபெறும் போது பண்புரீதியான மாற்றம் ஏற்படுகிறது. ஐம்பூதங்கள் பண்பு ரீதியான மாற்றம் பெற்று உயிர் என்ற விசேடித்த விளைவு ஏற்படுகிறது என்பது சாருவாக விளக்கம். வெற்றிலை , பாக்கு, சுண்ணாம்பு, உமிழ்நீர் ஆகிய பொருட்கள் சரிவிகிதாச்சாரத்தில் சேர்ந்து இரத்தச் சிவப்பில் வெற்றிலைக் குழம்பு உண்டாவதை சர்ரவாகத்தின் பண்பு ரீதியான மாற்றத்திற்கு எடுத்துக்காட்டும் ” (ந.முத்துமோகன், 2016) என்ற ந.முத்துமோகனின் கருத்தானது சாருவாகத்தின் ததத்துவத்தை விளக்கி நிற்கிறது. அதாவது சாருவாகம் என்பது உலகாயதத் தத்துவத்திற்கு அறிவியல் ரீதியான விளக்கம் அளிக்கும் வகையில் அளவையியல் சார்ந்த சிந்தனை மரபினை உடையது என்று கூறுகிறது.

**பழந்தமிழரின் சிந்தனையில் சார்வாகம்**

சார்வாகம் என்னும் தத்துவம் தோன்றி வளர்ந்தது வட மாநிலங்களில் என்றாலும் தமிழகத்திலும் அதன் சாரமான உலகாயதத் தத்துவம் வளர்ச்சி பெற்றிருந்தது. உலகாயதச் சிந்தனைகள் யாவும் சார்வாக தத்துவத்தின்பாற்பட்டதே யாகும். சங்க இலக்கியத்திலேயே பூதவாத மெய்மை பற்றிக் கூறப்படுகிறது. பூதவாதம் என்பது பொருள்முதல்வாதம் ஆகும். பொருளே முதன்மை எனச் சுட்டுவதாகும். அதே வேளையில் இறைக் கருத்தியலை மறுதலித்தலாகவும் இதுவே அமைகிறது.

“செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும் வளி திரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்று இவை
சென்று அளந்து அறிந்தோர் போல” (புறம்.30)

என்னும் புறப்பாடலில் பண்டையத் தமிழர் இயற்கையின் இயக்கவியலை அறிந்திருந்தனர் என்பதையும் அவை இறைவனால் இயக்கப்படவில்லை என்பதைப் பற்றிய அறிவினைப் பெற்றிருந்தனர் என்பதையும் கூறுவது போல இப்பாடலில் சூரியனின் இயக்கத்தையும் அதன் பாதையையும் கிரகணக் கதிர்களால் அமைந்த பார் வட்டமுஐம் காற்று இயங்கு திசைகளும் எந்தப் பற்றுதலும் இல்லாது தனித்து நிற்கும் வானமும் ஆகிய இவற்ழறைச் சென்று அங்கங்கு அளந்தறிந்தவர்களைப் போல என்று கூறப்படுகிறது. இவற்றை அளந்து அறியும் வகையினர் என்போர் சார்வாகர் ஆவர். அவர்கள் தமிழகத்தில் இவற்றைப் பற்றிய அறிதலைக் கொண்டு வாழ்ந்திருந்தனர் எனக் கூறுகிறது.

உலகத் தோற்றம் என்பது பிக்பாங்க் எனப்படும் பெரு வெடிப்பினால் உருவானது என்னும் கருத்து அறிவியலாளர்களால் நிரூபணம் செய்யப்பட்ட ஒன்றாகும். அத்தகைய பிக்பாங்க் வெடிப்பினைப் பற்றிக் கூறும் வகையில்தான்,

“நிலம் நீர் தீ வளி விசும்பொடு ஐந்தும்
உலகந்த மயக்கம் உலகம்” (தொல்.)

என்று கூறுகிறது தொல்காப்பியம். இதற்கு இயைந்தாற் போன்று , புறப்பாடல் ஒன்று,

“மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்புதை வருவளியும்
வளித்தலை இயதீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போல” (புறம்.2)

என்ற பாடல் உணர்த்துகிறது. சார்வாகர்கள் நிலம் , நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் சரியான விகிதத்தில் சேரும் போது உலகில் உள்ள பொருட்கள் தோன்றத் தொடங்குகின்றன என்று கூறினர் என்பதை அறியலாம். அத்தகைய ஒன்றாகவே உலகம் ஐம்பூதங்களால் ஆனது என்று கூறுவதாக அமையும் இந்தப் பாடலின் கருத்தும் காணப்படுகிறது. பரிபாடலில் ஐம்பூதத்து இயற்கை என்று கூறப்பட்ட செய்திகள் யாவும் இறைவனால் ஆன செயல்கள் என்று கூறவதைக் காணலாம். உயிர்களின் பரிணாமத்தைப் பற்றிய தொல்காப்பிய்தின் நூற்பாவானது ,

“ஒன்றறிவதுமே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே” (தொல்.பொருள்.மரபு.27)

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் உயிர்களின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு பற்றிக் கூறப்படுகிறது. ஓறறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிர்களின் வளர்ச்சி நிலைகள் பற்றியதாக இதில் உள்ள கருத்துக்கள் அமைகின்றன. தமிழரின் அறிவு மரபில் உலகாயதத் தன்மை கொண்ட அல்லது உலகையும் உலக உயிர்களையும் உற்றறிந்து கொள்கின்ற வகையில் அறிவியல் பண்புகளுடன் கூடிய அறிதலைக் காணமுடிகிறது. மணிமேகலையில் சமயக் கணக்கர் திறம் கேட்ட காதையில் பல்வேறு சமயத்தாருடன் விவாதம் புரிகிறாள் அதில் இறுதியாக பூதவாதியிடம் விவாதிக்கிறாள். உலகமே உண்மையானது. உலகில்

உள்ள பொருட்களே உண்மை கர்மம் , மோட்சம், உயிர், ஆன்மா, வீடுபேறு என்பன யாவும் கருத்தளவைகளே அன்றி உண்மையாகா என்று கூறுவதைக் காணமுடிகிறது.

“தாதகிப்பூவும்கட்டியும்இட்டு
மற்றும்கூட்டமதுக்களிபிறந்துஆங்கு
உற்றிடும்பூதத்துஉணர்வுதோன்றிடும்
அவ்வுணர்வுஅவ்வப்பூதத்துஅழிவுகளின்
வெவ்வேறுபிரியும்பறைஓசையில்கெடும்” (மணி.சமயக்கண்ணர்.265-269)

என்னும் பாடலடிகளில் இது கூறப்படுகிறது. பூதவாதியானவன் உலகே பிரத்தியட்சம் என்று கூறுகிறான். ஆத்திப்பூவும்,
வெல்லக்கட்டியும்இட்டுமற்றும்சிலவற்றைக்கூட்டமதுவில்மயக்கும்களிப்புத்தன்மைஉருவாவது போல் ,மண், நீர்முதலானபூதப்பொருள்களுக்குஉணர்வுதோன்றுகிறது.அந்தஉணர்வுகள்பூதம்அழியும்போதுவெவ்வேறாக ப்பிரியும். பறைஓசையால்கெட்டுப்போகும்என்று கூறுகிறார். மேலும் ,

“உயிரொடும்கூட்டியஉணர்வுடைப்பூதமும்
உயிர்இல்லாதஉணர்வுஇல்பூதமும்
அவ்வப்பூதவழிஅவைபிறக்கும்
மெய்வகைஇதுவேவேறுஉரைவிகற்பமும்
உண்மைப்பொருளும்உலோகாயதன்உணர்வே
கண்கூடுஅல்லதுகருத்தளவுஅழியும்
இம்மையும்இம்மைப்பயனும்இப்பிறப்பே
பொய்ம்மைமறுமைஉண்டாய்வினைதுய்த்தல்” (மணி.சமயக்கணக்கர்.270-272))

என்னும் பாடலடிகள் உயிர்கள் பூதங்களின் சேர்க்கையினால் உருவாகின்றனவே அன்றி யாராலும் படைக்கப்பட்டவை அல்ல என்றும் உயிர் இல்லாத பொருட்களும் அந்தந்த பொருட்களின் வழி பிறக்கும் என்று கூறுகிறார். கண்ணில் காண்பது மட்டுமே உண்மை அன்றி அதற்கு மேல் வேறு உலக சிந்தனைகள் யாவும் பொய்யே ஆகும். இம்மையும் மறுமையும் , கர்ம வினையும் இந்தப் பிறப்பிலேயே அமையும். உலகில் தாம் காண்பது மட்டுமே உண்மை என்று கூறுவதாக அமைகிறது. “இறுதியாக பூதவாதி பேசுகிறார். பொருள்தான் உண்மையானது. அதிலிருந்துதான் உணர்வு தோன்றுகிறது என்கிறார். பூதவாதி பூதம் உணர்வுடையதும் உணர்வு இல்லத (உயிர் இல்லாத) பூதம் எனவும் இரு வகைப்படும். உணர்வுடைய பூதத்திலிருந்து உயிர் தோன்றும் இது பூதங்களின் சேர்க்கையால் ஏற்படுவது. மறுபிறப்பு இல்லை. இம்மைப் பயனும் இப்பிறப்பே. ” (தேவ.பேரின்பன், 2015) என்ற தேவபேரின்பனின் விளக்கம் இப்பாடலின் பொருளை விளக்குவதாக அமைகிறது.

இவ்வாறு மணிமேகலையில் சமணக் கணக்கர்களில் பூதவாதி என்பவர் உரைத்தக் கருத்துக்கள் சார்வாகத்தின் கருத்துக்களேயாகும். ஐம்பூதச் சேர்க்கையில்தான் இவ்வுலகில் உயிர்கள் தோன்றுகின்றன. குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் அவை இணையும் போது வெவ்வேறு உயிர்கள் தோன்றுகின்றன என்பது கூறப்படுகிறது. தமிழரின் தத்துவ மரபில் லோகாயதச் சிந்தனைகள் சார்வாகம் என்னும் பூதவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒரு வகையில் வடமரபின் சார்வாகம் தமிழகத்தில் பூதவாதமாக நிலை கொண்டிருப்பதைக் காணலாம்.

**முடிவுரை**

தமிழரின் தத்துவ மரபானது நீண்ட காலத் தொன்மை கொண்டது. ஐரோப்பிய அறிவொளிக்காலச் சிந்தனை மரபிற்கெல்லாம் முந்தையது. பகுத்தறிவுவாதம் என்று சொல்லப்படுகின்ற பொருள்முதல்வாதச் சிந்தனைகள் சார்வாகமாக , உலகாயதமாக இங்கு பின்பற்றப்பட்டு வந்துள்ளமையைக் காணமுடிகிறது. உலகியல் சார்ந்த பொருட்கள் , உயிர்கள் யாவும் ஐம்பூதச் சேர்க்கையினால் உருவானவையேயன்றி படைக்கப்பட்டனவன்று. உலகு கடந்த உண்மை , கடவுள், அன்மா, மறுபிறப்பு, கர்மவினை, வீடுபேறு என்பன யாவும் கருத்தளவுகளேயன்றி அவற்றில் நம்புவதற்கு ஏதுமில்லை என்று கூறுவதைக்

காணமுடிகிறது. உலகத் தோற்றம் , பிக்பாங்க் பெருவெடிப்பின் மூலம் உலகப் பொருட்கள் தோன்றுவது , உயிர்களின் தோற்றப் பரிணாம வளர்ச்சி போன்ற செய்தகிளை தொல்காப்பியம் , சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. மணிமேகலையில் சமயக் கணக்கர்கள் யாவரும் தத்தம் சமயங்களின் தன்மைகளை விளக்கி உரைக்கின்றனர். பூதவாதி என்னும் சார்வாகரும் தம் கருத்தை வெளிப்படுத்துகிறார். உலகியல் சார்ந்த உண்மையைத் தவிர வேறு உண்மைகள் இல்லை. கண்ணால் காணும் உலகம் மட்டுமே உண்மை என்று கூறுவதாக அமைகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. ஹரியண்ணா, இந்தியத் தத்துவம் – II, தமிழில் வ.ஆ.தேவசேனாபதி , ப.நா.ஷண்முகசுந்தரம், தமிழ்நாடு பாடநூல் மற்றும கல்வியியல் பணிகள் கழகம் , சென்னை, 2019.
2. ந.முத்துமோகன், இந்தியத் தத்துவங்களும் தமிழின் தடங்களும் , நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, 2016.
3. தேவபேரின்பன், தமிழர் வளர்த்தத் தத்துவங்கள், பாரதி புத்தகாலயம், சென்னை, 2015.
4. அ.மா.பரிமணம், கு.வெ.பாலசுப்பிரமணியன் (ப.ஆ) , புறநானூறு மூலமும் உரையும் - 1, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை, 2011
5. ஆ.சிவலிங்கனார் (தொ.ஆ) , தொல்காப்பிய உரைக்களஞ்சியம் , உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010.